செ.வெ.எண்: 83 /அக்டோபர் / 2021 நாள்: 17.10.2021

## செய்தி வெளியீடு

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.எஸ்.இரகுபதி அவர்கள், மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் ஆகியோர், இன்று (17.10.2021) திருச்சிராப்பள்ளி மத்திய சிறைச்சாலையினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

சிறைக் கைதிகளால் தயாரிக்கப்படும் போர்வை, கம்பளி, அரசு மருத்துவமனைகளுக்கான பேண்டேஜ் துணி, ரொட்டிகள்,அணிவகுப்பு தொப்பி, குளியல் மற்றும் சலவை சோப்பு, இனிப்பு மற்றும் காரம் தயாரிப்புப் பணிகள், கோப்பு அட்டைகள், ஆயத்த ஆடைகள் உள்ளிட்டவற்றையுப் பார்வையிட்டு அதன் விவரங்களை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து, சிறைச்சாலையில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தினையும் (ITI), அதில் உள்ள பாடப்பிரிவுகளான பிட்டர், வெல்டர், எலெக்ட்ரீசியன், கம்ப்யூட்டர், டெய்லரிங் ஆகிய பாடப்பிரிவுகள் சொல்லித்தரப்படுவதையும், இதனைப் படிக்கக் கூடிய சிறைக்கைதிகளின் விவரத்தையும் கேட்டறிந்தார். இந்திய அளவில் தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி மத்திய சிறையிலும், இராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் சிறையிலும் ஆகிய இரண்டு இடங்களில் மட்டும்தான் இந்த தொழிற்பயிற்சி நிலையம் உள்ளதாக மாண்புமிகு அமைச்சர்களிடம் அலுவலர்கள் தெரிவித்தனர்.

பின்னர் சமையலறையினையும் காலை உணவாகத் தயாரிக்கப்பட்ட, கோதுமை உணவான கோதுமை சப்பாத்தி, கோதுமைத் தோசை, கஞ்சி, வெங்காய சட்டினி, தேனீர், உள்ளிட்டவற்றை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் சாப்பிட்டுப் பார்த்து உணவின் தரத்தினை ஆய்வு செய்தார்.

பின்னர், முதல் முறையாக குற்றம் செய்து சிறைத்தண்டனை பெற்ற கைதிகளிடம் கலந்துரையாடி, அவர்களுக்கு போதிக்கப்படும் கல்வி, நல்லொழுக்கம் குறித்தும், 18 முதல் 24 வயதுக்குட்பட்டவர்களுக்கான ‘‘பட்டம்’’ எனும் திட்டத்தின் செயல்பாடு குறித்தும் கேட்டறிந்தார். தொடர்ந்து தண்டனைக் கைதிகள் இருப்பிடத்தைப் பார்வையிட்டு அவர்களிடம் கலந்துரையாடி அவர்களுக்கான பயிற்சி, வழங்கப்படுகின்ற கல்வி, முன்னேற்றத்திற்கான செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார். பின்னர் மருத்துவமனையினைப் பார்வையிட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அங்கு வழங்கப்படும் சிகிச்சை, மருந்துகள் இருப்பு, தொடர் சிகிச்சைக்கான நடவடிக்கைகளை ஆய்வு செய்தனர். சிறையில் உள்ள பகுதியில் மேற்கொள்ளப்படவேண்டிய பராமரிப்புப் பணிகள் குறித்து மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

இந்நிகழ்வில்,மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப.. அவர்கள், திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.இனிகோ இருதயராஜ், திருச்சி சரக சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துணைத்தலைவர் திரு.ஆர்.கனகராஜ், மத்திய சிறை கண்காணிப்பாளர் திருமதி.எம்.ஊர்மிளா, காவல் துணை ஆணையர் (சட்டம் & ஒழுங்கு) திரு.ஆர்.சக்திவேல், சிறை அலுவலர் திரு.எம்.சதீஸ்குமார் , திருச்சி பெண்கள் தனிச்சிறை கண்காணிப்பாளர் திருமதி ராஜலெட்சுமி, காவல் உதவி ஆணையர் திரு.அஜய்தங்கம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**